முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான கதர் தொழில் நலிவடையாமல் இருக்கவும், அந்தத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்தவும்தான் இதுபோன்ற தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன. எனவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு மாநில கதர் ஆணையம் வழியாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலனை செய்து மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு அனுப்பும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

குறுகிய கால வினா 3, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

3—

சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*21036—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் புற்றுநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

1993 ஏப்ரல் 22]

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே போற்றும் ஒப்பற்றத் தலைவியாக, நான் உயிருள்ள வரை வணங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மறுபரிசீலனைசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கேன்சர் மருத்துவமனையை ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கேன்சர் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் பெரிய மருத்துவ மனைகளிலேதான் அமைக்க முடியும். எனவே தாலுக்கா மருத்துவ மனைகளிலே, வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் சத்தியமங்கலம் மருத்துவமனையில் அமைக்கமுடியாது என்று தெரிவித்தேன். ஆனால் ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலேயும் இப்படிப் பட்ட தனிப்பிரிவு அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எனவே சத்தியமங்கலத்திலே இப்போது அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை. தலைமை மருத்துவ மனைகளிலே ஆங்காங்கே அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

425—

பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவமுறை கருச் சிதைவுப் பிரிவு அமைத்தல்.

*10163—திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவ மனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இப்புறநகர் மருத்துவமனையில் மருத்துவமுறை கருச்சிதைவுப் பிரிவு தனியாக அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை, எனினும் மருத்துவ கருச்சிதைவுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.